
# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை 19.08.2025 கதிர் 290











## நல்லூரில் இன்று மாம்பழத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 19

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழாவின் 22ஆம் நாளான திருவிழாவான மாம்பழத் திருவிழா (தெண்டாயுதபாணி உற்சவம்) இன்று சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து பிள்ளையாரும் முருகப்பெருமானும் வெளிவீதியுலா வந்தனர்.

இந்த மாம்பழத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். அத்தோடு முருகப் பெருமான் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி 7➤

### வங்குரோத்து அரசியல்வாதிகள்

# ஆட்சி கவிழும் என போலிப் பரப்புரை!

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் விசனம்



கொழும்பு, ஓக. 19

"இந்த ஆட்சி கவிழும் என வங்குரோத்து அடைந்த அரசியல்வாதிகள் பிரச்சாரம் முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் போலிப் பரப்புரைக்கு வடக்கில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகளும் உயிர்கொடுக்க முற்படுகின்றனர்." - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். 7➤




## சஷீந்திர ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 19

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது. 7➤

## பேலியகொடையில் இன்று துப்பாக்கிச்சூடு! காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி சாவு!!



கொழும்பு, ஓக. 19

கம்பஹா, பேலியகொடை, ஞானரத்ன மாவத்தை பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி 7➤

## ஊடகவியலாளரை வலுக்கட்டாயமாக வெளியேற்றிய சாவகச்சேரி நகர பிதா

### நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் சம்பவம்

சாவகச்சேரி, ஓக. 19

சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் இருந்து ஊடகவியலாளர் ஒருவர், நகர பிதாவின் பணிப்பின் பேரில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

நகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நகர பிதா வடிவேலு சிறிபிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. 7➤



## கைதான துசிதவுக்கு 28 வரை விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 19

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவ இன்று கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளார். 7➤





## யாழில் இன்று வெடிக்காத நிலையில் பெருமளவு துப்பாக்கி ரவைகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக.19

கொடிகாமம் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை நீர் குழாய்களை மண்ணில் புதைக்கும் பணிகளுக்காக நிலத்தை அகழ்ந்தபோது வெடிக்காத நிலையில் ஒரு தொகை துப்பாக்கிரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

குழாய்களைப் புதைப்பதற்காக நிலத்தை அகழ்ந்து போது சந்தேகத்துக்கிடமான முறையில் உரைப் பை ஒன்று காணப்பட்டதையடுத்து, கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதையடுத்து சம்பவ இடத்துக்கு 7➤




## புதிய அரசியல் கட்சிகளுக்கான நேர்முகத்தேர்வு ஆரம்பம்

கொழும்பு, ஓக 19

2025 ஆம் ஆண்டுக்கான பதிவுக்காக விண்ணப்பித்திருந்த புதிய அரசியல் கட்சிகளின் நேர்முகத் தேர்வுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 47 அரசியல் கட்சிகள் முதற்கட்ட நேர்முகத் தேர்வுகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கடந்த பெப்ரவரி மாதம் கோரப்பட்டிருந்த நிலையில், 83 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றில் அடிப்படை ஆவணங்களைக் கூட பூர்த்தி செய்யாத 36 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

அதன்படி, தற்போது 47 விண்ணப்பங்களுக்கான முதற்கட்ட நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் அந்த நேர்முகத்தேர்வில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகள் இரண்டாவது சுற்று நேர்முகத் தேர்வுக்கு பரிந்துரைக்கப்பட உள்ளன.

குறித்த நேர்முகத்தேர்வுக்கு பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகள் 2025 ஆம் ஆண்டுக்கான புதிய அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்யப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஜனாதிபதி உரிய தீர்வை வழங்காவிட்டால் போராட்டம் தொடரும்! மக்கள் எச்சரிக்கை




கொழும்பு, ஓக 19

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்றைய தினம் ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த போராட்டத்தில் பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்கள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம்பெற்று வருகிறது.

மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி, ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில், மக்களுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்துள்ளதோடு,

ஜனாதிபதி உரிய தீர்வை வழங்காது விட்டால் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எச்சரித்துள்ளனர்.

(ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# அநுரவின் தீர்மானத்தால் மறைந்த எம்.பிக்களின் மனைவிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

கொழும்பு, ஓக 19

நாடாளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியத்தை ரத்து செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவால், ஆறு கட்சித் தலைவர்கள் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியத்தை இழப்பார்கள் என்று நாடாளுமன்ற தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, விமல் வீரவன்ச, டி.டபிள்யூ. குணசேகர, திஸ்ஸ விதாரண மற்றும் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட ஆறு கட்சித் தலைவர்கள் தங்கள் ஓய்வூதியத்தை இழப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனைவிமார் 150 பேர் ஓய்வூதியம் பெறுவதாகவும், இதற்கிடையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனைவிமாரும் என 499 பேர் ஓய்வூதியத்தை இழக்க நேரிடும் என ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமசிறி மானகே கூறியுள்ளார்.

உலகிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தையும் பறிக்கும் ஒரே நாடு இலங்கையாகும். வேறு தொழில்கள் இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை பறிப்பது மனித உரிமை மீறல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஓய்வூதியங்களை ரத்து செய்வதற்கு முன்னர், அரசாங்கத்தை இருமுறை சிந்திக்க வேண்டும் எனவும் பிரேமசிறி மானகே கோரியுள்ளார். (ஐ)



# பாதுகாப்பற்ற வட்டுவாகல் பாலத்தை புனரமைக்க அமைச்சரவை அனுமதி

பாதுகாப்பற்ற நிலையில் உள்ள முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்பு பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இறுதியாக திருத்தப்பட்ட வட்டுவாகல்

பரந்தன் - கரைச்சி - முல்லைத்தீவு (யு035) வீதியின் 50ஃ1 ஆம் இலக்க பாலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் களப்புக்குக் குறுக்காக வட்டுவாகல் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இறுதியாக திருத்தப்பட்டுள்ள குறித்த பாலம் தற்போது பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. அதனால், வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் இருவழிப் பாதையுடன் கூடிய புதிய பாலமாக அதனை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி கிடைக்கப்பெற்ற விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளுக்கமைய, இந்த நிர்மாணப் பணிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கையில் வீதிகளில் கைவிடப்பட்ட நிலையில் 300 சிறுவர்கள்

கொழும்பு, ஓக 19

ஒரு மாதத்திற்குள் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்பட்ட மற்றும் வீதிகளில் கைவிடப்பட்ட 300 சிறுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

அவர்களில் 26 சிறுவர்கள் கொழும்பு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், குறித்த சிறுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அவர்களின் பராமரிப்பையும், பாதுகாப்பையும் உறுதி செய்யக்கூடிய பாதுகாவலர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களிடம் குறித்த சிறுவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும் குறித்த சிறுவர்களின் பாடசாலை கல்விச் செயல்பாடுகளை முறையாகப் பராமரிக்கவும், அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசாங்கம் பொறுப்பேற்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சிறுவர்களை வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுக்க சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தொடர்ந்து கண்காணித்து வருவதாக அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்தார். (ஐ)

# மாற்றங்களுக்கு இணங்காதவர்கள் வேறு இடங்களில் வேலை தேடலாம்!

கொழும்பு, ஓக 19

கைரேகை வருகை மற்றும் மேலதிக நேர ஊதியம் தொடர்பான அரசாங்க முடிவுகளுக்கு தபால் தொழிற்சங்கங்கள் உடன்பட்டால் மட்டுமே அவர்களுடன் சந்திப்பு நடத்தத் தயாராக இருப்பதாக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

குறுகிய கால வேலைநிறுத்தங்கள் கூட தபால் துறைக்கு நிதி இழப்பை ஏற்படுத்தும்.

நீடித்த வேலைநிறுத்தங்கள் திறைசேரியை சீர்குலைத்து எதிர்கால சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளைப் பாதிக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

தபால் தொழிற்சங்கங்கள் முன்வைத்த 19 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளை அரசாங்கம் தீர்த்து வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் மேலதிக நேரக் கொடுப்பனவு போதுமானதாக இல்லை அல்லது கைரேகை வருகை முறையை ஏற்க முடியாதவர்கள் வேறு இடங்களில் வேலை தேடலாம் என தெரிவித்துள்ளார்.

அஞ்சல் சேவையில் மேலதிக நேரக் கொடுப்பனவு கட்டமைப்பிலோ அல்லது கைரேகை வருகை முறையிலோ மேலும் மாற்றங்கள் எதுவும் செய்யப்படாது என்று மீண்டும் உறுதிப்படுத்தினார். 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் ஞாயிற்றுக்கிழமை (17) மாலை முதல் நாடளாவிய வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர். இதன் விளைவாகத் அஞ்சல் நிலையங்களில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் தேக்கமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியாவில் முதல் 10 நாடுகளுக்குள் இடம்பிடித்த இலங்கை!

கொழும்பு, ஓக 19

இந்தியா செல்லும் வெளிநாட்டு பயணிகளில், கடந்த ஐந்து ஆண்டுகளில் முதல் 10 மூல நாடுகளில் இலங்கை, அமெரிக்கா, பங்களாதேஷ், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகியவை அடங்குவதாக இந்திய அரசாங்க தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பான கேள்விகளுக்கு எழுத்துப்பூர்வ பதிலில் இந்திய கலாச்சார அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் இந்தத் தரவைப் பகிர்ந்ததாகீவுஜ செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுலா செல்லும் வெளிநாட்டவர்கள்

அந்த தரவுகளின்படி, 2024 ஆம் ஆண்டிற்கான குவயு புள்ளிவிவரங்கள் 9.95 மில்லியனாகப் பதிவாகியுள்ளன. ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பின் கூற்றுப்படி, சர்வதேச சுற்றுலா வருகை இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வெளிநாட்டு குடிமக்களின் வருகை. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவில் குவயு-களுக்கான முதல் பத்து மூல சந்தைகள் பற்றிய விவரங்களும் அமைச்சரிடம் கேட்கப்பட்டன.

அதற்கமைய கடந்த ஐந்து ஆண்டுகளில் (2020-2024) குவயு-களுக்கான முதல் 10 மூல நாடுகளின் அட்டவணைப்படுத்தப்பட்ட தரவைப் அமைச்சர் பகிர்ந்தார்.

அதன்படி கடந்த ஐந்தாண்டு காலத்தில் இந்தியாவில் குவயு-களுக்கான முதல் 10 நாடுகள் அமெரிக்கா, பங்களாதேஷ், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, மலேசியா, இலங்கை, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் சிங்கப்பூர் ஆகும்.

2020 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில், இந்தியாவில் FTA-களுக்கான முதல் மூல சந்தையாக பங்களாதேஷ் இருந்தது.

அதே நேரத்தில் 2021, 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்தது. இந்தியாவில் FTA-களுக்கான முதல் ஐந்து மூல நாடுகளில் இடம்பிடித்த மற்ற மூன்று நாடுகள் - இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகும். (ஐ)

# குறிஞ்சாத்தீவு உப்பளத்தை மீண்டும் ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற யுத்த சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த குறிஞ்சாத்தீவு (ஆனையிறவு வடக்கு) உப்பளத்தை மீண்டும் ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் உற்பத்தி நடவடிக்கைகள், அரச தனியார் பங்குடமை முறைமையின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச முன்மொழிவு விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

# மும்பையில் கனமழை காரணமாக தனியார் நிறுவன ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணியாற்ற அறிவுறுத்தல்



மும்பையில் கனமழை காரணமாக தனியார் நிறுவன ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த 3 நாட்களாக பெய்த கனமழையால் மும்பை நகரமே வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. மும்பையில் பல இடங்களில் சுரங்கப்பாதைகளில் தேங்கியுள்ள மழை நீரில் கார்கள் மூழ்கின. மும்பையில் பள்ளி, கல்லூரி உள்பட கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மும்பை மற்றும் ராய்கட் பகுதிகளில் அதிகனமழை பெய்யும் என்று வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மும்பையில் உள்ள அனைத்து கடற்கரைகளும் மூடப்பட்டுள்ளன.

செம்பூர், தாதர், ஹிந்த்மாதா, அந்தேரி, கிங்ஸ் சர்க்கிள் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மும்பையில் மணிக்கு 65 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்றும் வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மும்பை - தானே இடையே அனைத்து ரயில்சேவைகளும் ரத்துசெய்யப்பட்டுள்ளன. அத்தியாவசியமற்ற பிற அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. மராட்டியத்தில் கனமழை காரணமாக கடந்த 3 நாட்களில் 12 பேர் உயிரிழந்தனர். மராட்டியத்தில் கனமழை காரணமாக 6 மாவட்டங்கள் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மும்பை, நான்டெட் உள்பட 6 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மும்பையில் காலை 4 மணியில் இருந்து 11 மணிக்குள் 15 செ.மீ. மழை கொட்டித் தீர்த்துள்ளது. இந்நிலையில் தனியார் நிறுவன ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. மும்பை உயர் நீதிமன்றம் பகல் 12.30 மணி வரை மட்டுமே செயல்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலகளவில் 6 விமான நிலையங்கள் கொண்ட பட்டியலில் டெல்லி: ஆண்டுக்கு 10.90 கோடி பயணிகளை கையாளும் டெல்லி விமான நிலையம்



உலகளவில் 10 கோடி பயணிகளை கையாளும் விமான நிலையங்களில் டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் இணைந்துள்ளது. பயணிகள் மற்றும் சரக்கு விமானங்களின் போக்குவரத்து குறித்த தரவுகளை சேகரிக்கும் ழுயுபு நிறுவனம் அதிக பயணிகளை கையாளும் விமான நிலையங்களின் பட்டியலை இம்மாதம் வெளியிட்டது. 10 கோடிக்கும் அதிகமான பயணிகளை கையாளும் 6 சர்வதேச விமான நிலையங்கள் பட்டியலில் ஆண்டுக்கு 10.90 கோடி பயணிகளை கையாண்டுள்ள டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையமும் இடம்பெற்றுள்ளது.

இதன் மூலம் ஆசியாவிலேயே டோக்கியோவில் உள்ள ஹனேடா விமான நிலையத்திற்கு அடுத்து டெல்லி சர்வதேச விமான நிலையம் இந்த சிறப்பை பெற்றுள்ளது. இந்த பட்டியலில் 2024 ஆண்டு தரவுகளின்படி அட்லாண்டா விமான நிலையம் ஆண்டுக்கு 12.5 கோடி பயணிகளை கையாண்டு முதல் இடத்தில உள்ளது. 12 கோடி பயணிகளை கையாண்டு துபாய் இரண்டாவது இடத்திலும் டோக்கியோ ஹனேடா விமான நிலையம் 11 கோடி பயணிகளையும், டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் 10.90 கோடி பயணிகளையும் கையாண்டு உள்ளன. இதற்கு அடுத்த அடுத்த இடங்களில் ஹீத்ரோவ் விமான நிலையமும், டல்லாஸ் விமான நிலையமும் இடம் பெற்றுள்ளது.

டெல்லி விமான நிலையத்தில் இரண்டாவது முனையம் இணைக்க அரசு திட்டமிட்டுள்ள நிலையில் அது முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தால் ஆண்டுக்கு 14 கோடி பயணிகளை கையாளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகளவிலும் விமான நிலையங்களை விரிவாக்கம் செய்யும் பணிகளை பல்வேறு நாடுகள் முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றன. தற்போது 9 கோடி பயணிகளை கையாண்டு வரும் இஸ்தான்புல் விமான நிலையத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் 12 கோடி பேரை கையாளும் வகையில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதே போல ரியாத்தில் அமைய உள்ள கிங் சல்மான் சர்வதேச விமான நிலையத்தில் 2030க்குள், 12 கோடி பயணிகளை கையாள திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)



## மராட்டியத்தில் கனமழை காரணமாக கடந்த 3 நாட்களில் 12 பேர் உயிரிழப்பு

மராட்டியத்தில் கனமழை காரணமாக கடந்த 3 நாட்களில் 12 பேர் உயிரிழந்தார். மராட்டியத்தில் கனமழை காரணமாக 6 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. கனமழையால் மும்பை - தானே இடையே அனைத்து ரயில் சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன. (ஐ)



## கோபத்தின் உச்சத்தில் கட்சி நிர்வாகியை பளார் விட்ட சீமான்

கோபத்தின் உச்சத்தில் கட்சி நிர்வாகியை பளார் விட்ட சீமானுக்கு சமூகவலைத்தளங்களில் கண்டனங்கள் எழும்பி வருகின்றன. செஞ்சியில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் நேற்றுமுன்தினம் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒன்றிய அரசின் பரிந்துரையின் பேரில், செஞ்சி கோட்டையை மராட்டிய மன்னன் கட்டியதாக யுனெஸ்கோ, உலக பாரம்பரிய சின்னமாக அங்கீகரித்துள்ளது.

ஆனால் செஞ்சி கோட்டையை தமிழர் கோனேரிக்கோன் மன்னன் தான் கட்டினார் என்று நாம் தமிழர் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சீமான் பேசிக்கொண்டிருக்கும்போது, கூட்டத்தின் ஒரு பகுதியில் சிலர் தொடர்ந்து கூச்சலிட்டும், கோஷங்கள் எழுப்பியும் இடையூறு செய்தனர். அவர்களை அமைதியாக இருக்குமாறு கட்சி நிர்வாகிகள் பலமுறை எச்சரித்தும், குழப்பம் நீடித்தது.

இதனால் கடுப்பான சீமான், கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல், திடீரென மேடையின் முன்பகுதிக்கு சென்று அங்கிருந்து கீழே பாய்ந்து குதித்தார். ஒரு நபரை தாக்க முயன்றார். இதில், அவரைத் தடுக்க முயன்ற கட்சி தொண்டரையும் அவர் அறைந்ததாகக் கூறப்படுகிறது. பின்னர், அவரை சமாதானப்படுத்தி மீண்டும் மேடைக்கு அழைத்துச் சென்றனர். பொதுக்கூட்ட மேடையில் ஒரு கட்சியின் தலைவர் இவ்வாறு கோபத்தில் குதிப்பது இதுவே முதல் முறை என்பதால், இந்நிகழ்வின் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி, பல்வேறு விதமான விமர்சனங்களையும், விவாதங்களையும் உண்டாக்கியுள்ளது.

ஒரு கூட்டத்தை அமைதியாக நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது, கட்சியின் கட்டுப்பாட்டில் குறைபாடுகள் உள்ளதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. அதே சமயம் சீமானின் இத்தகைய ஆவேசமான நடவடிக்கைகள், அவரது பேச்சு மற்றும் செயல்பாடுகளால் அடிக்கடி பொதுக்கூட்டங்களில் பதற்றமான சூழல் உருவாகி, அவருக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. (ஐ)

# சாவிக்கொத்துகள் எழுதும் வரலாறு!

யார் எழுதுகிறார்கள் என்பதைப் பொறுத்தே வரலாறு பதிவாகிறதல்லவா? வாசிக்கும் பழக்கம் உடையவர் எனில் நிச்சயம் ஆன் ஃபிராங்கின் நாட்குறிப்பைப் படித்திருப்போம். குறைந்தபட்சம் கேள்விப்பட்டிருப்போம். நாஜி கொடுமைகளுக்கு ஆளான பதின்ம வயது யூதப் பெண்ணின் டைரிக் குறிப்புகள் அவை. மறைவிடத்தில் வசித்து முடிவில் நாஜிகளிடம் சிக்கி வதை முகாமுக்குச் சென்று, நோய் கண்டு இறந்தும் போனாள் ஆன்.

அவள் இறந்த சில மாதங்களில் பிரிட்டிஷ் வெற்றி பெற்று ஹிட்லரிடம் இருந்து யூதர்களை மீட்டது. அடுத்த சில ஆண்டுகளில் அன்னியின் நாட்குறிப்பு சில திருத்தங்களுடன் பதிப்பிக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டு முதல் பல பதிப்புகள் கண்டு, எழுபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் பல கோடி மக்களைச் சென்றடைந்தது அந்த நூல். யூதர்கள் அனுபவித்த கொடுமைகளின் சான்றாக இன்றும் இருக்கிறது.

அந்த நூல் வெளியான சில மாதங்களில், ஃபர்ஹா என்ற சிறுமியும் அவளுடைய உற்றார் உறவினர்களும் தங்களுடைய வீடுகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அந்தக் கிராமம் மட்டுமின்றி, பாலஸ்தீனம் முழுக்கப் பல லட்சம் பேர் இப்படித் தங்கள் கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். 1948ஆம் ஆண்டு நடந்த இப்பேரழிவு நிகழ்வினை நக்பா என்கிறார்கள் பாலஸ்தீனியர்கள். விரட்டியது யார்? யூதர்கள்.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து யூதர்கள் துரத்தப்பட்டபோது அடைக்கலம் கொடுத்தது பாலஸ்தீனம். ஓடிக் களைத்த






இந்தக் கதையைத் திரைப்படமாக்கினால் அவருக்கு எதிர்காலமே இருக்காது என சொல்லப்பட்டது. தயாரிப்பதற்கு ஆள் கிடைப்பதும் எளிதல்ல. ஸ்வீடன் நாட்டு தயாரிப்பு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் ஜோர்டன் தயாரிப்பு நிறுவனம் இணைந்து இப்படத்தைத் தயாரித்துள்ளது. படத்தில் பணிபுரிந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் பலருக்கும் இக்கதையுடன் உள்ளார்ந்த தொடர்பு இருக்கிறது. படமாக்கப்பட்ட போது பல காட்சிகளை இவர்கள் கண்ணீருடனே எடுத்துள்ளனர்.

யூதர்கள் தங்களுக்கென்று ஓரிடத்தைக் கட்டமைக்க விரும்பினர். இறைவன் வாக்களித்த நிலத்தை இறைவனே வந்து கொடுக்கும்வரை காத்திருக்கவேண்டாம், நாமே எடுத்துக்கொள்வோம் என முடிவு செய்தனர். யூதர்களின் ஜியோனிச இயக்கம் வலுப்பெற்றது. பிரிவினைக் கோடுகளைப் போடுவதில் வல்லவர்களான பிரிட்டிஷார், பாலஸ்தீனத்திலும் தங்கள் வேலையைக் காட்டினர். மேலை நாடுகளின் ஆதரவால் இஸ்ரேல் உருவாகிவிட்டது. வீடு? ஏற்கெனவே அங்கிருக்கும் பாலஸ்தீனியர்களை அடித்துத் துரத்தினால் முடிந்தது வேலை.

தப்பியோடியவர்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தார்கள். போக முடியாதெனப் பிடிவாதம் பிடித்தவர்களை, காஸா நிலத் துண்டில் அடைத்து உலகின் மிகப் பெரிய திறந்தவெளிச் சிறையாக மாற்றிவிட்டார்கள். அவர்கள் கொன்று குவிப்பதும் பதிலுக்கு இவர்கள் குண்டு வைப்பதும் தினசரி நடக்கும் சகஜமான விஷயங்களாகிவிட்டன. சிரியா, ஜோர்டன், எகிப்து என அண்டை நாடுகளில் அகதிகளாக வாழும் பாலஸ்தீனியர்கள் என்றேனும் ஒரு நாள் தங்கள் நிலத்துக்குத் திரும்பமுடியும் என்ற நம்பிக்கையைவிடத் தயாராக இல்லை. தாங்கள் விரட்டப்பட்ட கதையைத் தங்கள் சந்ததிகளிடம் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.



அப்படித் தான் கேட்ட கதை ஒன்றைத்தான் ஃபர்ஹா படமாக இயக்கியிருக்கிறார் டரின் ஸலம் (னுயசசலெ து ளுயடடயஅ). எளிமையான கதை. பதினான்கு வயதாகும் ஃபர்ஹாவுக்கு கல்யாணம் செய்து வைக்க நினைக்கிறார் அவள் அப்பா. அச்சிறுமிக்கோ, நகரத்தில் வசிக்கும் தன் தோழியைப் போலத் தானும் படிக்க வேண்டும் என்று ஆசை. தன் மகளின் எதிர்கால நலன் கருதி அவள் விருப்பப்படியே படிக்கவைக்கச் சம்மதிக்கிறார் அப்பா. அதைக் கொண்டாடும் நேரத்தில்தான் ஜியோனிச ஹகனாஹ் படையினரால் அந்த கிராமம் சூறையாடப்படுகிறது. தப்பிக்க முடியாத நிலையில் தன் மகளைக் காப்பாற்ற வீட்டுக்கு வெளியே இருக்கும் கிடங்கின் உள்ளே அனுப்பி மறைத்து வைத்து வெளியே மரப்பலகைகளைக் கொண்டு ஆணிகளை அடித்து மூடிவிடுகிறார் அப்பா. யாராவது அதைப் பார்த்தாலும் உபயோகமில்லாத அறை என்று நினைத்து உள்ளே செல்லமாட்டார்கள். தான் நிச்சயம் திரும்பிவருவேன் எனச் சொன்னவரை, அதன்பிறகு ஃபர்ஹா பார்க்கவேயில்லை.

வெளிச்சம் குறைவான அறைக்குள் ஃபர்ஹாவுடன் நாமும் வெளியில் நடப்பவற்றை அரைகுறையாகப் பார்க்கும் வகையில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. படத்தில் அதிகப்படியான வன்முறையோ ரத்தம் தெறிக்கும் காட்சிகளோ இல்லை. எனினும் நிலைமையின் தீவிரத்தை நாம் உணரமுடியும். ஃபர்ஹாவுடன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நாமும் காத்திருக்கிறோம். இரவு பகல்களைக் கடந்து நீளும் அந்தக் காத்திருப்பு முடிந்து அங்கிருந்து ஃபர்ஹா தப்பிவிடுவதோடு படத்தின் கதை முடிகிறது. நிஜத்தில் ஃபர்ஹாவைப் போல பல லட்சம் அகதிகளின் வாழ்க்கைக் கதை அங்கிருந்து தொடங்கி இன்றும் அலைக்கழிக்கப்படுகிறது.

பாலஸ்தீன மக்களின் வரலாறு, யூதர்களின் கதையைப் போல போதுமான அளவுக்குச் சொல்லப்படவில்லை. யூத ஆதிக்கம் நிறைந்த ஹாலிவுட்டில் பாலஸ்தீனக் கதைகள் குறைவாக இருப்பதில் வியக்க ஏதுமில்லை.

மற்ற திரைத்துறைகளில் வரும் படங்கள் தயாரிப்பதில் தொடங்கி கவனம் பெறுவது வரை இடர்களை எதிர்கொள்கின்றன. ஃபர்ஹா படத்தின் இயக்குநர் டரின் ஸலம், பாலஸ்தீன வேர்களைக் கொண்டவர். ஜோர்டனில் வசிக்கிறார். இதற்கு முன்பு விருதுகளை வென்ற குறும்படங்களை இயக்கியுள்ளார். ஃபர்ஹா அவருடைய முதல் திரைப்படம்.

தங்கள் கதையைச் சொல்வதற்கான உரிமைகூட மறுக்கப்படுகிறதே என்கிற வலியில் வரும் கண்ணீர் அது. நாஜிகள் யூதர்களுக்குச் செய்த கொடுமைகள் பற்றி எத்தனையோ படங்கள், தொடர்கள் இருக்கின்றன. வரலாற்றைப் பதிவு செய்வது அதை மீண்டும் செய்யாமல் இருக்கப் பாடம் கற்பதற்குத்தானே? சொல்லப்போனால் ஜெர்மனி நாட்டில் இதெல்லாம் நிஜமாகவே பாடங்களாக இருக்கின்றன. அங்கே பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் தங்கள் முன்னோர்கள் யூதர்களுக்கு இழைத்த தவறுகளைப் படித்துத் தெரிந்துகொள்கிறார்கள். வாரம் தவறாமல் இப்போதும் ஆவணப்படமாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் செய்கிறார்கள். இவ்வளவு முதிர்ச்சியுடன் தன் தவறுகளை ஒரு நாடு கையாள முடியுமா என வியக்கும் அளவுக்கு நாடு முழுக்க அருங்காட்சியகங்களும் நினைவு சின்னங்களும் நிறைந்துள்ளன. இந்தியாவில் இதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. எந்த நாடாக இருந்தாலும் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம் இருப்பது பெண்களுக்குத்தான்.

உலகம் முழுக்க அகதிகளாக இருப்போரில் கிட்டத்தட்ட பாதிக்குப்பாதி பெண்களும் குழந்தைகளும். முகாம்களில் ஊட்டச்சத்துள்ள உணவு கிடைப்பது முதல் கழிப்பறை வசதி வரை பாகுபாடுகளை எதிர்கொள்கிறார்கள். பாலியல் அத்துமீறல்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் பணம் சம்பாதிக்கும் பொறுப்பும் சேர்ந்து இரட்டைச் சுமையைத் தாங்குகிறார்கள். உள்நாட்டுக்கலவரமானாலும் சரி, நாடுகளுக்கிடையேயான போர்களானாலும் சரி முடிவெடுக்கும் இடத்தில் பெரும்பாலும் ஆண்களே இருக்கிறார்கள். இவர்களால் பாதிக்கப்படுவதெனவோ பெண்களே. இலங்கையில் இருந்து அகதிகளாக வந்து தமிழ்நாட்டில் தங்கியிருப்போர் பேரன் பேத்திகளே எடுத்துவிட்டார்கள். இன்னும் அவர்களுக்குக் குடியுரிமை வழங்க மறுக்கிறது இந்திய அரசு. பல தீர்ப்புகள் வந்த பிறகும் அவர்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. இந்து அகதிகளுக்குக் குடியுரிமை வழங்கும் குடியுரிமைச் சட்டத்திருத்தத்தில் கூட இவர்களைச் சேர்க்கவில்லை.

இதற்கெல்லாம் எந்த இந்துவின் மனமும் புண்படுவதாகத் தெரியவில்லை. இப்படித் தேவைக்கேற்ப மனம் புண்படும் வழக்கத்தை யூதர்களிடம் அதிகம் காணமுடியும். தங்களுக்கு எதிராக யாராவது ஒரு வார்த்தை பேசினாலும் அது உண்மையாகவே இருந்தாலும் யூதவெறுப்பாளர்கள் என முத்திரை குத்திவிடுவார்கள். ஹாலோகாஸ்ட் வரலாற்றினால் யூதர்களின் மீது விமர்சனம் வைக்கப்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# ஜெலன்ஸ்கி நினைத்தால் ரஷ்யா உடனான போரை முடிவுக்கு கொண்டு வரமுடியும்: அதிபர் டிரம்ப் கருத்து




ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து டிரம்ப் - ஜெலன்ஸ்கி சந்திப்பு வாஷிங்டனில் நடைபெறுகிறது. டிரம்ப் பதிவு செய்த கருத்துகள் குழப்பத்தை அதிகரித்துள்ளன. உக்ரைன் - ரஷ்யா இடையே மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஈடுபட்டுள்ளார். இதற்காக, ரஷ்ய அதிபர் புதினை கடந்த 15ம் தேதி சந்தித்து பேசினார். அலாஸ்காவில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது போரை நிறுத்துவது தொடர்பாக எந்த முடிவும் எட்டப்படவில்லை. எனினும், போரை நிறுத்துவதற்கான நிபந்தனைகளை புதின், டிரம்பிடம் கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை இன்று டிரம்ப் சந்திக்க உள்ளார்.

இந்த சந்திப்பு நடைபெற இருக்க கூடிய சூழலில், உக்ரைனுக்கு நேட்டோவில் இடம் இல்லை என்று டிரம்ப் கூறியுள்ளார். டிரம்ப் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கூறியதாவது அதிபர் ஜெலன்ஸ்கி நினைத்தால் உடனடியாக, அவரால் ரஷ்யா உடனான போரை முடிவுக்கு கொண்டுவர முடியும் அல்லது சண்டையைத் தொடர முடியும். இந்தப் போர் எப்படி தொடங்கியது என்பதை நினைவில் கொள்ளுங்கள். 12 ஆண்டுகளுக்கு முன்பு, ஒபாமா ஆட்சியில் ஒரு தாக்குதலும் இல்லாமல் எடுக்கப்பட்ட கிரிமீயாவை திரும்ப பெற முடியாது. உக்ரைன் நேட்டோவிற்குள் செல்ல முடியாது. சில விஷயங்கள் என்றும் மாறாது என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

## டிரம்பை சந்தித்த ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள்



விரைவில் உக்ரைனில் அமைதி திரும்பும் என உக்ரைன் அதிபர் ஜெலஸ்கியிடம் அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளதையடுத்து ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் டிரம்ப்பை சந்தித்து பேசினர்.

ரஷ்ய - உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக ரஷ்ய அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்க அதிபர் டிரம்ப்பை இன்று (ஆக.18) , வெள்ளை மாளிகையில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்தித்து பேசினார்..

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனை முடிவுக்கு கொண்டு வர, அமெரிக்க அதிபர் டிரம்ப், அலாஸ்கா நகரில் ரஷ்ய அதிபர் புடினை சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. இருப்பினும் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமானதாக இருந்ததாக இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, வெள்ளை மாளிகையில் அதிபர் டிரம்ப்பை சந்தித்த உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறினார். இதற்கு முன்னர் கடந்த பிப்ரவரியில் இருவரும் சந்தித்து பேசினர். அப்போது இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தற்போதும் அதுபோல் நடக்காமல் இருக்க ஜெலன்ஸ்கி உடன் சேர்ந்து, டிரம்ப்பை சந்திக்க உள்ளதாக பிரிட்டன் பிரதமர், பிரான்ஸ் அதிபர், ஜெர்மனி அதிபர் உள்ளிட்ட ஐரோப்பிய நாட்டு தலைவர்கள் அறிவித்து இருந்தனர்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் டிரம்ப்பை ஜெலன்ஸ்கி சந்தித்து பேசினார். அப்போது புடின் தெரிவித்த விஷயங்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக ஜெலன்ஸ்கியிடம் டிரம்ப் தெரிவித்தார்.

சந்திப்புக்கு பின் டிரம்ப் கூறியது, போரை முடிவுக்கு வருவதற்காக நியாயமான வாய்ப்புகள் உள்ளது.இங்கு வருகை தந்த ஜெலன்ஸ‍்க்கு நன்றி . போரை முடிவுக்கு கொண்டு வர புடினும் விரும்புகிறார்.. இது வரை 6 பேர்களை நிறுத்தியுள்ளேன். விரைவில் உக்ரைனில் அமைதி திரும்பும். உலக நாடுகள் இந்த போரால் தளர்ந்து போய்விட்டன. நான் 6 போர்களை நிறுத்தி உள்ளேன். இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு வரும் என நம்புகிறேன். இது தொடர்பாக ரஷ்யா- உக்ரைனுடன் இணைந்து அமெரிக்கா பணியாற்றும். இவ்வாறு டிரம்ப் கூறினார்.

ஜெலன்ஸ்கி கூறியது, எங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் அமெரிக்காவிற்கு பாராட்டுகள். இவ்வாறு ஜெலன்ஸ்கி கூறினார். (ஐ)

## இந்தியா – பாக்., போர் நிறுத்தம் எப்போது வேண்டுமானாலும் மீறப்படலாம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் தகவல்



இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான நிலைமையை, ஒவ்வொரு நாளும் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்தார்.

ஜம்மு - காஷ்மீரின் ப ஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, நம் ராணுவம், 'ஆப்பரேஷன் சிந்துார்' என்ற பெயரில், பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகள் முகாம்களை அழித்தது.

இதைத் தொடர்ந்து, இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பாகிஸ்தான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மத்திய அரசு சண்டையை நிறுத்தியது.

ஆனால், தன் தலையீடு இரண்டு அணு ஆயுத அண்டை நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தத்திற்கு வழிவகுத்ததாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார். பாகிஸ்தானுடனான எந்த பிரச்னையிலும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்திற்கு எந்தப் பங்கும் இல்லை என்று பிரதமர் நரேந்திர மோடி திட்டவட்டமாக தெரிவித்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவில் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, இந்தியா - - பாக்., சண்டையை அதிபர் டிரம்ப் தீர்த்து வைத்ததாக மீண்டும் கூறினார்.

நாங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள், ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று நினைக்கிறேன். அமைதியை முன்னுரிமையாகக் கொண்டு நிர்வாகம் செய்யும் ஒரு அதிபரை பெற்றதற்கு நன்றி சொல்ல வேண்டும். இந்தியா - பாகிஸ்தான் உட்பட பல போர்களை அவர் நிறுத்தியுள்ளார்.

ஒவ்வொரு நாளும் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையில் என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். அதற்கு காரணம், தற்போதுள்ள போர் நிறுத்த ஒப்பந்தமானது வலுவில்லாமல் உள்ளது. அதனால், எந்த நேரத்திலும் அது மீறப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

ஏனென்றால், போர் நிறுத்தத்தை பராமரிப்பது என்பது ஒரு சவாலான பணி. போர் நிறுத்தம் மிக விரைவாக முறிந்து போகக்கூடும். ஆசிய நாடுகளான தாய்லாந்து - கம்போடியோ இடையேயான போர் நிறுத்தம் நீடிக்காததை நாம் பார்த்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## கடல் எல்லையில் 10 சீன போர் விமானங்கள், 6 கப்பல்கள் நடமாட்டம்: உஷாரான தைவான்



தைபே் தைவான் கடல் எல்லையில் சீனாவின் ராணுவ விமானங்களும், கடற்படை கப்பல்களும் இயங்குவதை தைவான் கண்டறிந்துள்ளது.

தங்கள் நாட்டு எல்லையில் சீன விமானங்கள், கப்பல்கள் நடமாட்டம் இருப்பதை தைவான் பாதுகாப்புத்துறை அமைச்சகம் உறுதிபடுத்தி உள்ளது. இதுகுறித்து, தமது சமூக வலை தள பக்கத்தில் ஒரு பதிவையும் வெளியிட்டு உள்ளது.

அதில் கூறப்பட்டு உள்ளதாவது: தைவானை சுற்றி 10 ராணுவ விமானங்கள், 6 போர்க்கப்பல்கள் கண்டறியப்பட்டுள்ளன. விமானங்களில் 2 விமானங்கள் இடைநிலைக் கோட்டை கடந்து நுழைந்துள்ளன. நாங்கள் நிலைமையை கண்காணித்து சூழலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு தைவான் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தைவான் மீது சீனா தமது ஆதிக்கத்தை செலுத்த தீவிரமாக செயலாற்றி வருவதால், தங்கள் நாட்டுக்கு ஆதரவாக நிற்க இங்கிலாந்து முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன் வலியுறுத்தினார் என்று தைவான் நாட்டு செய்தி ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு உள்ளன. (ஐ)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தார். இதேவேளை, புராணக் கதையை மையமாகக் கொண்டே ஒவ்வொரு வருடமும் இந்தத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய ஒரு சமயம் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நாரதர் மாம்பழமொன்றை வழங்கினார்.

அதனை யாருக்குக் கொடுப்பது எனத் தீர்மானிக்க, முதலில் உலகைச் சுற்றி வருபவருக்கே இந்த மாம்பழத்தைத் தருவோம் என சிவபெருமானும் உமாதேவியாரும் பிள்ளையாருக்கும், முருகனுக்கும் கூறினர்.

உடனே முருகப் பெருமான் மயில் மீதேறி உலகைச் சுற்றிவரச் சென்றபோது, பிள்ளையார் சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து நீங்களே என் உலகம் எனக் கூறி மாம்பழத்தைப் பெற்றுக்கொண்டார்.

உலகைச் சுற்றி வந்த முருகனுக்கு மாம்பழம் கிடைக்காததால் தனது நகை, உடை அனைத்தையும் துறந்த முருகன், ஆண்டிக் கோலத்தில் பழனி மலையில் போய் அமர்ந்தார். இந்தப் புராணக் கதையை மையமாக வைத்தே இந்தத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.

## சஷீந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் ஒகஸ்ட் 6 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சஷீந்திர ராஜபக்ஷ கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

பேலியகொடை, ஞானரத்ன மாவத்தை பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் பேலியகொடை மீன் சந்தையில் பணிபுரியும் 45 வயதுடைய நபர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊடகவியலாளரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்போது, கடந்த கூட்டறிக்கையில் பல விடயங்கள் விடுபட்டுள்ளன எனவும், யார் யார் என்ன கருத்துக் கூறினார்கள் என்ற விடயம் குறிப்பிடப்படவில்லை எனவும் உப நகர பிதா ஞா.கிசோர் கடந்த கூட்டறிக்கை வாசித்த போது தனது எதிர்ப்பை வெளியிட்டார்.

அதன்போது உப நகர பிதாவின் உரையை இடைநிறுத்திய நகர பிதா, அங்கிருந்த ஊடகவியலாளரை வெளியேற்றுமாறு நகர சபை உத்தியோகத்தர்களுக்குப் பணித்தார்.

அதனையடுத்து கூட்டத்தில் இருந்த ஊடகவியலாளர், தன்னை ஊடகவியலாளர் என அடையாளப்படுத்திய போதிலும், சபை அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதியில்லை எனக் கூறி வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

உள்ளூராட்சி சபைகளின் மாதாந்தக் கூட்டங்களில் ஊடகங்கள் கலந்துகொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய சபைகள் அனுமதி வழங்கியுள்ள நிலையில் சாவகச்சேரி நகர சபையில் மாத்திரம் ஊடகங்களுக்கு அனுமதியில்லை என ஊடகவியலாளரை அங்கிருந்து நகர பிதா வெளியேற்றிய சம்பவம் சக ஊடக வியலாளர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரி நகர சபை நகர பிதா தெரிவின்போது, ஊடகங்களுக்கு அனுமதிவழங்கப்பட்ட நிலையில், சபையில் நடைபெறும்விடயங்கள்மக்கள்மத்தியில்சென்றடைவதைத் தடுக்கும் முகமாகவே ஊடகவியலாளரைச் சபையில் இருந்து வெளியேற்றியுள்ளதாகவும் , குறிப்பாகக் கடந்த கூட்டறிக்கையில் உள்ள குறைபாடுகளை உப நகர பிதா சுட்டிக்காட்டி உரையாற்றும்போது ஊடகவியலாளரை அங்கிருந்து அப்புறப்படுத்தியமை நகர பிதா தனது தவறுகளை வெளியில் தெரியாமல் தடுக்கவே எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவ, அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான 4 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசி போன்ற பொருட்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில், கடந்த மே மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட துசித ஹல்லொலுவ, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்றம் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

எனினும், கடந்த ஜூன் மாதம் 20 ஆம் திகதி அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவருக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகள் விதிக்கப்பட்டதுடன், வெளிநாட்டு பயணத் தடையும் விதிக்கப்பட்டது.

இதற்கிடையில், அண்மையில் அவர் பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்தது. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக, கொழும்பு குற்றப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவவை கைது செய்யுமாறு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து அவர் இன்று காலை கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விரைந்த பொலிஸார் அந்த உரைப் பையை மீட்டு சோதனையிட்ட போது அவற்றுக்குள் வெடிக்காத நிலையில் துப்பாக்கி ரவைக் கோர்வைகள் காணப்பட்டன.

அவற்றை மீட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்ற பொலிஸார், அவற்றுள் 1393 துப்பாக்கி ரவைகள் காணப்படுகின்றன எனவும், அவற்றை நீதிமன்றத்தில் பாரப்படுத்தி நீதிமன்ற உத்தரவில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தனர்.

## ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லங்கை ஐயப்ப சுவாமிமார்களின் யாத்திரையினை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தியதன் பின்னர் அது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை கொழும்பு செட்டியார் தெரு கல்யாண முருகன் மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

ரவி குருசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சிறப்பு அதிதியாகவும், இந்து சமய அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் வை.அனிருத்தன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள ஐயப்ப நாமத்தில் இயங்கும் அமைப்புக்கள், குரு சுவாமிகள் மற்றும் ஐயப்பன் தொடர்புடைய அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது சுவாமிமார்களால் பரிந்துரைக்கப்பட்ட ஐயப்ப மாலை அணிந்த சுவாமிமார்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் இருந்து வருகை தந்த ஐயப்பசாமி குருமார்கள் தங்களது கருத்துக்களையும் முன்வைத்தனர். அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர்களை குருசுவாமிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

இதன்போது அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

“ஐயப்பன் யாத்திரை கடந்த காலங்களில் புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தப்படவில்லை. இதற்குரிய முயற்சி முன்னெடுக்கப்பட்டும் ஏன் அத்தனை வருடங்கள் நடக்கவில்லை? இனவாத ஆட்சியாளர்கள், இனவாத அமைச்சரவை இருந்ததால்தான் நடக்கவில்லை.

ஆனால் எமது சமதர்ம ஆட்சியில் இனவாதம் இல்லை. மக்கள் நலனுக்கே முக்கியத்துவம், முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அந்தவகையில் புனித யாத்திரை தொடர்பான அமைச்சரவை பத்திரம் வந்தபோது அதற்கு ஏகமனதாக ஆதரவளிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு முழுமையாக முன்னின்று செயற்பட்ட பிரதி அமைச்சர் தோழர் பிரதீப்புக்கு நன்றிகள்.

இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். சமூக சீர்கேட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே, சமூக மாற்றத்துக்கு ஆன்மீகவாதிகளின் பங்களிப்பும் மிக முக்கியம்.

அதேவேளை, வறுமை ஒழிப்புக்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மறுபுறத்தல் வரி வருமானம் அதிகரித்துள்ளது. பொருளாதார இலக்குகளை அடைந்து வருகின்றோம்.

இந்நிலையில் ஆட்சி மாற்றம் பற்றி வங்குரோத்து அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இதற்கு உயிர்கொடுக்கும் வகையில் வடக்கில் தோல்விகண்ட, மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் முயற்சித்து வருகின்றனர்.” - என்றார்.

# மன்னார் காற்றாலை மின் கோபுர திட்டத்துக்கு எதிராக தொடரும் போராட்டம்!

மன்னார் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுர திட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக 17ஆவது நாளாக இன்றும் (19) தொடர்ச்சியான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டம் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு பனங்கட்டிக்கொட்டு, ஜிம் பிரவுன் நகர், எமில் நகர், இத்திக்கண்டல், தலைமன்னார் கிராமம் ஆகிய கிராம மக்களும், மீனவர்களும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கிவருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு திட்டங்கள் முழுமையாக கைவிடப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாவிக்கொத்துகள் எழுதும்...

பொதுவாக அனைவருக்கும் தயக்கம் உள்ளது. அதை மீறிப் பேசுபவர்கள் யூதவெறுப்பாளர்களாகி கொஞ்சம் அசந்தால் நாஜி பட்டமும் சேர்ந்தே கிடைக்கும்.

ஃபர்ஹா திரைப்படம் பரவலாகப் பாராட்டுகளைப் பெற்றதும் படத்தைத் தடை செய்யவேண்டும் என யூதர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இத்தனைக்கும் படத்தில் அரசியல் குறைவாகவே உள்ளது. பின்னணியை நாம் தேடித் தெரிந்துகொள்ளும் வகையிலும் எந்த அகதியுடனும் பொருந்தும் வகையிலும் கதை இருக்கிறது. ஆனால், ஜாஃபாவில் படத்தைத் திரையிட்டால் அல் சரயா திரையரங்குக்கு வழங்கப்படும் நிதியுதவியை நிறுத்துவதாக யூதர்கள் மிரட்டினர்.

எதிர்ப்புகளை மீறி ஃபர்ஹா, உலகத் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது. ஏசியா பசிபிக் ஸ்கிரீன் அவார்ட்ஸின் சிறந்த இளையோர் படத்துக்கான விருதை வென்றது. ஜோர்டான் சார்பில் ஆஸ்கர் விருதுக்காக அந்த ஆண்டு இப்படமே அனுப்பிவைக்கப்பட்டது. பரிந்துரைப் பட்டியலில் இருந்து நீக்கியே தீரவேண்டும் என யூதர்கள் ஒற்றைக் காலில் நின்றார்கள்.

ஒவ்வொரு அங்கீகாரத்தின் போதும் கடுமையான எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. நெட்பிளிக்ஸில் படம் வெளியான போதும் அப்படியே. அதிகாரமும், அமெரிக்க ஆதரவும் இருக்கும் இஸ்ரேல், இன்றைக்கு காஸாவில் செய்யும் கொடுமைகள் ஆவணப்படங்களாக வரும்போதும் எதிர்ப்பைச் சமாளித்தே மக்கள் பார்வைக்குக் கொண்டுவரவேண்டியுள்ளது. பாலஸ்தீன் கலெக்‌ஷன் என்று சுமார் இருபது திரைப்படங்கள், ஆவணப்படங்களை அண்மையில் நெட்பிளிக்ஸ் வாங்கியிருந்தது. அவற்றை நெட்பிளிக்ஸில் இருந்து நீக்க யூதர்கள் தொடர்ந்து முயற்சி செய்தனர். பார்வையாளர்கள் அவற்றைப் பார்த்து வரவேற்பளித்து லாபம் கிடைத்தாலும், நெட்பிளிக்ஸ் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காமல் கைவிட்டது. 2024ஆம் ஆண்டு அக்டோபரில் அவை அனைத்தும் நெட்பிளிக்ஸில் இருந்து நீக்கப்பட்டன.

ஃபர்ஹா திரைப்படமும் அப்படி ஒருநாள் நீக்கப்படலாம். ஆனால், லட்சக்கணக்கான பாலஸ்தீன அகதிகளின் நினைவில் இருந்து வரலாற்றை நீக்குவது அவ்வளவு எளிதல்ல. வீடுகளை விட்டு வெளியேறிய பின்னும் கையில் அந்த வீட்டின் சாவிக்கொத்தை இறுக்கிப்பிடித்திருக்கிறார்கள். சாவிக்கொத்தும் அதன் கதையும் பல தலைமுறைகள் கடந்தும் பயணம் செய்கின்றன. அவற்றைக் கேட்கும் அளவுக்கு அறிவு முதிர்ந்த சமூகம் ஒருநாள் உருவாகட்டும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2025 வெளியிடப்பெற்றது.